# தமிழில் சித்தர் மருத்துவ நூல்களின் தோற்றம் முனைவர்

**பால சிவகாட்சகம் / Bala Sivakadadcham***
69 ஹெவன்வியூ, ஃஸ்கார்பொரோ / 69 Havenview Road, Scarborough
ஒந்தாரோ, கனடா / Ontario, Canada
sivakad@gmail.com

Manuscript received 10 April 2021
Manuscript accepted 15 June 2021
*Corresponding author/First Author

**ஆய்வுச் சுருக்கம்**
சித்த மருத்துவ முறைக்கு உரியன என அடையாளப்படுத்தக்கூடிய நூல்கள் பெரும்பாலும் தமிழில் மட்டுமே இருப்பதாகக் கூறப்படுவதுண்டு. அகத்தியர், திருவள்ளுவர், தன்வந்தரி, திருமூலர், போகர், புலிப்பாணி, கம்பளச்சட்டைமுனி, கோரக்கர், மச்சமுனி உள்ளிட்டு சித்தர்களாக அறியப்பட்ட பலரினதும் பெயர்களில் இத்தகைய நூல்கள் கிடைக்கப்பெறுகின்றன. எனினும் சித்தமருத்துவம் தொடர்பான நூல்கள் ஆக்கப்பெற்ற காலப்பகுதி குறித்த ஆதாரபூர்வமான அல்லது நம்பகமான தரவுகள் எதுவும் இற்றைவரை கிடைக்கவில்லை. இன்று கிடைக்கக் கூடிய வரலாற்று மற்றும் இலக்கியச் சான்றுகளின் துணையோடு தமிழில் சித்த மருத்துவ நூல்களின் தோற்றம் பற்றி இக்கட்டுரையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. அகத்தியர் முதலான சித்தர்களினதும் முனிவர்களினதும் பெயர்களில் அறியப்படும் தமிழ் மருத்துவ நூல்களை அவற்றின் மொழிநடை மற்றும் யாப்பு நிலை என்பவற்றின் அடிப்படையில் மட்டுமன்றி அந்நூல்களில் கிடைக்கப் பெறும் அகச்சான்றுகளின் துணையோடும் ஆராயுமிடத்து இம்மருத்துவ நூல்கள் ஆக்கப்பெற்ற காலப்பகுதியை 16ஆம் நூற்றாண்டுக்கும் 19ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாக உறுதிப்படுத்த முடிகின்றது.

**கருச்சொற்கள்**: *சித்தமருத்துவம், இரசவாதம், இரசாயன தந்திரம், இரசமருந்துகள், பறங்கிரோகம், பறங்கிப்பட்டை, அகத்தியர் நூல்கள், போகர் ஏழாயிரம்*

**Abstract**
The texts that can be recognized as belonging to the Siddha system of medicine are found mostly in Tamil. Such texts are available under the names of many known Siddhas, including *Agastier, Thiruvalluvar, Dhanvantari, Thirumoolar, Bogar, Pulippani, Kambalachattaimuni, Korakkar*, and *Machchamuni.* However, there is no conclusive or reliable data on the time period in which these texts related to Siddha medicine were written. This article reviews the origins of Siddha medical texts in Tamil with the help of historical and literary evidence available today. By examining the Tamil medical texts available in the names of Siddhas, not only on the basis of their linguistic status but also on the basis of internal evidence available in those texts, it is possible to confirm the age of composition of these texts to a period between the 16th century and the 19th century.

**Keywords:** *Siddha medicine, Alchemy, Rasayana Tantra, Rasa medicine, Syphilis, Chobchini, Agastier books, Bogar 7000*

**முன்னுரை**

இந்திய சுதேச மருத்துவமுறைகளுள் ஆயுர்வேதம், யுனானி என்பவற்றுடன் சித்தமருத்துவமும் ஒன்றாகக் கூறப்படுகின்றது. இம்மருத்துவமுறைக்குரியன என அடையாளப்படுத்தக்கூடிய நூல்கள் தமிழில் மட்டுமே இருப்பதாகவும் கூறப்படுவதுண்டு. எனினும் சித்தமருத்துவம் தொடர்பான நூல்கள் பற்றியோ அவை ஆக்கப்பெற்ற காலப்பகுதி குறித்தோ ஆதாரபூர்வமான, நம்பகமான தரவுகள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. சித்தமருத்துவ நூல்களின் தோற்றம் பற்றிய முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமைக்குச் சித்தர்கள் என அறியப்படுவோர் பற்றிக் கூறப்படும் நம்பகத்தன்மையற்ற

மரபுக்கதைகளும் மத நம்பிக்கைகளும் முக்கிய பங்கு வகித்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் இன்று கிடைக்கக்கூடிய வரலாற்று மற்றும் இலக்கியச் சான்றுகளின் துணையோடு தமிழில் சித்த மருத்துவ நூல்களின் தோற்றம் பற்றிய ஒரு மீளாய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

**சித்த மருத்துவமும் இரசமருத்துவமும்**

சித்தமருத்துவத்தின் தனித்துவமான அடையாளமாக முன்னிற்பவை பாதரசம் உள்ளிட்ட உலோகங்களும் கனியுப்புக்களும் உபரசங்களும் கொண்டு தயாரிக்கப்படும் இரசமருந்துகள் ஆகும். சித்தர் பாரம்பரியத்தில் வந்தவர்களின் கண்டுபிடிப்பாக இவை கருதப்படுவதால் இவற்றைச் சித்தமருந்துகள் என்கிறோம். இத்தகைய மருந்துகளைப் பெரிதும் பயன்படுத்தும் மருத்துவ முறையினை இரசமருத்துவம் என்று அழைக்கும் வழக்கமும் உண்டு. ஆயுள்வேதத்தில் இரச சாஸ்திரம் அல்லது இரசாயன தந்திரம் எனப்படுவது ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகள் பற்றிய பாடமாகும். எனினும் ஆயுள்வேதத்தைப் போல் அல்லாது சித்தர்களின் ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகள் பெரும்பாலும் பாதரசம் (இரசம் அல்லது இரதம்), கந்தகம் உள்ளிட்ட கனிப்பொருள்களை முதன்மையாகக் கொண்டு செய்யப்படும் மருந்துகளாகும். யோகிகளின் ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகள் குறித்து மார்கோ போலோ முதற்கொண்டு ஐரோப்பியர் பலரும் தமது அவதானிப்புகளைப் பதிவு செய்துள்ளனர். ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்துகள் பற்றிய ஆய்வுகளுக்கும் செம்பு இரும்பு போன்ற உலோககங்களை இரசகுளிகைகளின் மூலம் பொன்னாகவும் வெள்ளியாகவும் மாற்றமுடியும் என்னும் இரசவாத நம்பிக்கைகளுக்கும் நீண்டகாலத் தொடர்பு உண்டு (White, 1996).

இரச மருத்துவத்தின் முன்னோடிகளுள் ஒருவராக அறியப்படுபவர் நாகார்ஜுனர் ஆவார். நாதசித்தர்கள் ஒன்பதுபேரில் நாகார்ஜுனரும் ஒருவர். இலங்கை மன்னன் இராவணன், சந்திரசேனர், மாண்டவியர், சுரசேனர், கம்பளர், கோவிந்தர், இலம்பகர், ஹரி மற்றும் இலக்கண நூலாசிரியர் வியாதி என்போர் இரசவாதத்தின் போதனாசிரியர்களாகக் கூறப்படுகின்றனர். இவர்களுடன் கூடவே இரசாங்குசர், பைரவர், நந்தி, மந்தான பைரவர், காகசண்டி (காகபுசுண்டர்), வாசுதேவர் என்போரும் மூலநூல் ஆசிரியர்களாகக் கூறப்படுகின்றனர். எனினும் இவர்களால் எழுதப்பட்டிருக்கக்கூடிய பண்டைய நூல் எதுவும் இன்று இல்லை (Ramachandra Rao, 1985). தமிழில் சித்தர்களின் மூலகுருவாக எண்ணப்படும் திருமூலர் ஆக்கிய திருமந்திரம் என்னும் நூல் உண்டு. எனினும் இந்நூலினை இரசவாதம் மற்றும் மருத்துவம் தொடர்பான நூல்களுள் ஒன்றாகக் கருதமுடியாது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பின்னரேயே பாதரசம் உள்ளிட்ட இரசாயனங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மருந்துகள் பற்றிக் கூறும் நூல்கள் சமஸ்கிருத மொழியில் தோற்றம் பெறுவதைக் காணமுடிகின்றது. இவற்றுள் சோமதேவரின் **இரசேந்திர சூடாமணி** (13ஆம் நூற்றாண்டு), நித்தியனாதசித்தரின் **இரசரத்னாகரம்** என்னும் நூல்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். 14ஆம் நூற்றாண்டில் ஆக்கப் பெற்றுள்ளதாகக் கருதப்படும் சாரங்கதாரரின் **சாரங்கதார சம்கிதை**யிலும் 16ஆம் நூற்றாண்டில் ஆக்கப்பெற்ற **பாவமிஸ்ரா**வின் பாவப்பிரகாசம் என்னும் ஆயுள்வேதநூலிலும் சித்தர்கள் உபகரித்த இரசமருந்துகள் மற்றும் நாடிப்பரிசோதனை பற்றிய விபரங்கள் தரப்படுகின்றன. கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், சித்தர்களின் இரசமருந்து தயாரிப்புகள் பற்றி விளக்கும் ஏராளமான நூல்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஆக்கப்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**தமிழில் சுதேச மருத்துவ நூல்களின் தோற்றம்**

சித்தர் வைத்திய நூலென்று இன்று கொள்ளப்படுபவை, யாப்பு நிலையிலும், மொழிநிலையிலும் பார்க்கும்பொழுது 14ம், 15ம் நூற்றாண்டுகளுக்கும் அதற்குப் பிந்திய காலத்துக்கும் உரியனவாகவே கொள்ளப்படவேண்டியுள்ளன என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி (சிவகடாட்சம், 2009).

பண்டைக்காலத்து முனிவர்களினதும் புலவர்களினதும் பெயர்களில் பிற்காலத்தவர் தமது நூல்களை, குறிப்பாக மருத்துவம் தொடர்பான நூல்களை, எழுதிவைப்பது நெடுங்காலமாக நடந்துவரும் ஒரு நிகழ்வு. தமது கருத்துக்களும் கண்டுபிடிப்புகளும் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக இவ்வாறு எழுதிவைத்தார்கள் எனக் கருதலாம். மூலநூல் ஆசிரியரின் பெயர் அறியப்படாதபோது நூல்களை அச்சிட்டு வெளியிட்டோர் புகழ்பெற்ற முனிவர்கள், சித்தர்கள் பெயரில் அவற்றை வெளியிட்டு வைத்தார்கள்.

அகத்தியர், தன்வந்தரி, திருமூலர், போகர், புலிப்பாணி, கம்பளச்சட்டைமுனி, கோரக்கர், மச்சமுனி உள்ளிட்டு சித்தர்களாக அறியப்பட்ட பலரினதும் பெயர்களில் இத்தகைய நூல்கள் எழுதிவைக்கப்பெற்றன. இலங்கை வேந்தன் இராவணனின் பெயரில் காணப்படும் நூல்களும் வள்ளுவரின் பெயரில் காணப்படும் தமிழ் மருத்துவ நூல்களும் இவ்வாறு பிற்காலத்தவர் எழுதிவைத்த நூல்களேயாகும்.

அகத்தியர் பெயரில் ஏராளமான தமிழ் மருத்துவ நூல்கள் கிடைக்கப்பெறுகின்றன. தமிழ்முனி எனப் போற்றப்படும் அகத்தியருக்கும் தமிழ்மொழிக்கும் இடையிலான தொடர்பு நெடுங்காலமாக வலியுறுத்தப்பட்டுவரும் ஒரு விடயமாகும். எனினும் இன்று இவர் பெயரில் கிடைக்கும் தமிழ் மருத்துவ நூல்களை இவரது ஆக்கங்களாகக் கருதமுடியாது. இன்று கிடைக்கப்பெறும் தமிழ் மருத்துவ நூல்களுள் காலத்தால் முந்தியவை எனக் கருதப்படக்கூடிய நூல்களுள் ஒன்று தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தோரால் வெளியிடப்பெற்றுள்ள **அகஸ்தியர் இரண்டாயிரம்** என்னும் நூலாகும். எனினும் இந்நூலில் காணப்படும் பாடல்கள் பொது ஆண்டு 1500 க்குச் சமீபமாக யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கைச் செகராசசேகரன் என்னும் மன்னனின் தூண்டுதலின்பேரில் எழுதப்பெற்ற **செகராசசேகரம்** என்னும் நூலுக்கு உரியன என்பது மூலநூற் சுவடிகளின் துணையோடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (சிவகடாட்சம், 2020).

அகத்தியர் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் அகஸ்தியர் இரண்டாயிரம் தவிர்ந்த ஏனையவை பதினேழாம் நூற்றாண்டில் அல்லது அதன்பின்னர் எழுதப்பட்ட சித்தமருத்துவ நூல்களை ஒத்திருப்பதை அவதானிக்க முடியும்.

## சித்தர் நூல்கள் ஆக்கப்பெற்ற காலத்தை நிர்ணயிக்க உதவும் சான்றுகள்

சித்தர் மருத்துவ நூல்கள் என அறியப்படும் நூல்கள் ஆக்கப்பெற்ற காலப்பகுதியை அவற்றின் யாப்பு நிலை, மொழிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமன்றி அந்நூல்களில் கூறப்படும் நோய்கள் மற்றும் மருந்துப்பொருள்கள் முதலியவற்றின் துணைகொண்டும் தெரிந்துகொள்ள முடியும்.

திருக்குறளை எமக்குத் தந்த திருவள்ளுவர் எழுதியதாகப் பத்துக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களின் பெயர்கள் தரப்படுகின்றன. திருவள்ளுவ நாயனார் இயற்றிய **ஞானவெட்டியான்** என்னும் தமிழ் மருத்துவநூல் அச்சிலும் வெளிவந்துள்ளது. இந்த நூலில் இடம்பெற்றுள்ள பாடல் ஒன்றில்

*"சாயாமல் அதிவீர ராம பாண்டியன் சொல்லும்*
*தமயந்தி சரித்திர நைடதமும்"*

என்னும் வரிகள் காணப்படுகின்றன. **நைடதம்** என்னும் தமிழ் நூலினை ஆக்கிய அதிவீரராமபாண்டியன் கி.பி. 1564க்கும் 1604க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் திருநெல்வேலிப்பகுதியை ஆண்டுவந்த மன்னன் ஆவான். தமிழ்ப்புலமை மிக்க இம்மன்னன் பற்றியும் இவனது ஆக்கங்களுள் ஒன்றான நைடதம் பற்றியும் குறிப்பிடும் ஞானவெட்டியான் கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பின்னரேயே எழுதப்பட்டிருக்கமுடியும் என்பதும் திருவள்ளுவர் இந்நூலினை எழுதியிருக்க முடியாது என்பதும் தெளிவாகும்.

இலங்கை மன்னன் இராவணன் ஆக்கியதாகக் கூறப்படும் மருத்துவ நூல்கள் உள்ளன என்பது பலருக்கும் ஆச்சரியம் தரும் விடயமாக இருக்கலாம். **குமாரதந்திரம், நாடிப்பரீட்சை, அர்க்கப்பிரகாசம்** ஆகிய மூன்று நூல்களின் ஆசிரியாக இராவணன் கூறப்படுகின்றான். மருந்துத் தயாரிப்புகளுள் ஒன்றான அர்க்கம் (arrack) பற்றிக் கூறும் **அர்க்கப்பிரகாசம்** என்னும் நூல் இராவணனுக்கும் அவனது மனைவியான மண்டோதரிக்கும் இடையிலான உரையாடலாக அமைந்துள்ளது. இந்த நூலில் கூறப்படும் மருந்துப்பொருள்களுள் அபினும் ஒன்று. மேலும் பறங்கிரோகத்துக்கு மருந்தாகப் பரிந்துரைக்கப்படும் பாதரச மருந்துகளுள் ஒன்றான சங்க திராவகம் (sankha-dravaka) பற்றி இந்நூலில் கூறப்படுகின்றது. எனவே இந்த நூல் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், ஆக்கப்பெற்றுள்ளது என்பதை உறுதியாகக் கூறமுடியும் (Ramachandra Rao, 1985).

சித்தர்கள் பெயரில் கிடைக்கும் ஏராளமான தமிழ் மருத்துவ நூல்கள் ஆக்கப்பெற்ற காலத்தைத் தீர்மானிக்கும் பல காரணிகளுள் பறங்கிரோகமும் பறங்கிப்பட்டையும் முக்கிய பங்கு வகிக்கின்றன. 16ஆம் நூற்றாண்டில், முதன்முதலாக இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட நோய்தான் இந்தப் பறங்கிநோய்.

போர்த்துக்கேயரால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட இந்தப் பால்வினைத் தொற்றுநோய் பறங்கிரோகம் என்று அறியப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. இதனை சிபிலிஸ் (syphilis) என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இந்தக் கொடிய நோய்க்கு சீனவேர் (chobchini) என அறியப்பட்ட மூலிகை மருந்தாகப் பயன்படும் என்னும் செய்தி 1540 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயருக்கு எட்டியது (Garcia de Orta, 1913). பறங்கி நோய்க்குச் சிறந்த மருந்தாக அறியப்பட்டதன் காரணமாகவே தமிழ் மருத்துவர் மத்தியில் சீனப்பாகு என்றும் சீனக்கிழங்கு என்றும் அறியப்பட்டுவந்த இம்மூலிகை பறங்கிப்பட்டை என்னும் பெயரைப் பெற்றிருத்தல் வேண்டும் (கதிரவேற்பிள்ளை, 1918).

மேகசூலை, வெட்டை போன்ற பெயர்களிலும் பறங்கிரோகம் தமிழ்மருத்துவ நூல்களில் குறிப்பிடப்பெறுகின்றது. பராசெல்சஸ் (Paracelsus) என்னும் ஐரோப்பிய மருத்துவர் 1535-இல் இந்த நோயின் குறிகுணங்கள் பற்றி எழுதிவைத்தார். பாதரசம் இந்தப் பால்வினை நோய்க்கு மருந்தாகலாம் என்பதையும் இவர் வலியுறுத்தி வந்துள்ளார். தமிழக மருத்துவர்கள் பறங்கி நோய்க்கு மருந்தாகப் பறங்கிப்பட்டை, பாதரசம் ஆகிய இரண்டையுமே பயன்படுத்தி வந்துள்ளனர்.

பறங்கி நோயும் பறங்கிப்பட்டையும் இடம்பெற்றுள்ள எந்த ஒரு நூலும் 16 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கமுடியாது. **அகத்தியர் வைத்திய காவியம் 1500, அகத்தியர் வைத்திய சிந்தாமணி 584, தேரையர் காப்பியம்** ஆகிய நூல்களில் பறங்கிப்பட்டை சேர்த்துத் தயாரிக்கப்படும் பறங்கிப்பட்டைச் சூரணம், சீனப்பதங்கம் ஆகிய மருந்துகளின் செய்முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

**அகத்தியர் வைத்திய காவியம் 1500** என்னும் நூலில் பறங்கிப்பட்டைச் சூரணம் பற்றிக் கூறும் பாடல் ஒன்றை இங்கு நோக்குவோம்.

போமப்பா கரப்பனொடு கிரந்திசூலை
    புண்பொடிகள் கிரந்தி வெட்டை குட்டம் போக
நாமப்பா பட்டையிலே சூரணஞ் சொல்வோம்
    நல்லவுரு வானதாய் புதுசாய் வாங்கி
ஆமப்பா பறங்கி யென்ற பட்டை அஞ்சு பலந்தான்
    அப்பனே தூக்கியபின் அமுக்கிரா சங்கு
வேமப்பா சிறு பிரப்பங்கிழங்கு கொன்றைப்பட்டை
    வெற்றிபுரி சாரணைவேர் கொடிவேலி வேரே (பாடல் 775)

அகத்தியர் நூல் திரட்டில் உள்ள அகத்தியர் பச்சை என்னும் பாடற்தொகுப்பில் பறங்கிச்சூலை பற்றிக் கூறப்பட்டுள்ளது. **அகத்தியர் வைத்திய பூரணம் 205** என்னும் நூலில் பறங்கி நோய்க்கு மருந்தாகக் கொடுக்கப்படும் இரசபற்பம் தயாரிக்கும் முறை தரப்பட்டுள்ளது.

பறங்கிச்சக்கை மேகநோய்க்குச் சிறந்த மருந்தாகும் என்னும் கருத்துத் **தேரையர் காப்பியம்** என்னும் நூலில் கூறப்படுகின்றது.

*பறங்கிச் சக்கையைப் பச்சையாய்க் கொள்ளினும்*
*உறங்கு மேகப்பிணி உள்ள நோயினமெலாம்*
*தேனதற் கமைச்செனச் செப்பும் ஆயுண்முறை*
*சூரம் இலேகியந் தோயநற் கிருதமாய்ப்*
*பாரணஞ்செய்யவும் பாக்கியமாகுமெய்*
*வாகாய் இதன்பெயர் வயித்தியர் சொல்வது*
*மேகாரி என்னுமோர் மேதகு நாமே*

பறங்கிப்பட்டை பற்றிக்கூறும் தேரையர் காப்பியம் 17ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குப்பின்னர் ஆக்கப்பெற்றுள்ளது என்றே கருதவேண்டும். தேரையர் பெயரில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்கள் கிடைக்கின்றன. இவை அனைத்துமே ஒருவரால் எழுதப்பட்டவைபோல் தெரியவில்லை. இந்நூல்கள் மொழிநடையிலும், யாப்பு நிலையிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

தமிழ்மொழி அகராதியைத் தொகுத்துத் தந்த நா. கதிரவேற் பிள்ளை அவர்களின் கருத்துப்படி இன்று தேரையர் பெயரில் கிடைக்கப்பெறும் தமிழ்மருத்துவ நூல்களுள் **பதார்த்த குண சிந்தாமணி, தயிலவர்க்கச் சுருக்கம், கஷாயம் நூறு, சிகிச்சை ஆயிரம்** என்பனவே காலத்தால் முந்தியனவாகும் (கதிரவேற் பிள்ளை, 1918). இவற்றுடன் தேரையர் பெயரில் கிடைக்கும் **நீர் நிறக்குறி நெய்க்குறி சாத்திரத்தையும்** சேர்த்துக் கொள்ளலாம். இந்நூலில் நித்தியனாதசித்தரின் **இரசரத்னாகரம், சித்தசாரம், இரசார்னவம்** ஆகிய வடமொழி நூல்கள் மேற்கோள் காட்டப்பெறுகின்றன. **தேரையர் காப்பியம், தேரையர் மகாகரிசல்** உட்பட தேரையர் பெயரில் வழங்கப்படும் பிறநூல்கள் கி.பி.17 அல்லது 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**தேரையர் மகா கரிசல்** என்னும் நூல் தெலுங்குப்புலவர் வேமனர் என்பவர் பற்றிக் குறிப்பிடுவதால் இந்நூல் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் ஆக்கப்பெற்றிருக்கலாம் என்பது தமிழ் இலக்கிய வரலாற்று அறிஞர் அருணாசலம் அவர்களின் கருத்து (அருணாசலம், 1970). எனினும் ஆய்வாளர்கள் மத்தியில் வேமனர் காலம் குறித்த ஒத்த கருத்து இல்லை.

*உத்தமஞ்சிவாடுசுமி நீவென வேமனர் வடுகில் உரைத்ததுபோல்*
*அத்தம் அஞ்சிவாடும் இருநாடியினும் ஈசுரத்தைப் போல் அமரர்தம்மில்*
*சுத்தம் அஞ்சி வாடு வேல் விசையை இந்நூலைக் காக்கச் சுங்கனோடு*
*சத்தமம் சிவாடு பொன்போல் வைத்தியர்க்குக் கரிசல் என்றால் சகசந்தானே*

வேமனரின் தெலுங்குக் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த சி.பி. பிரவுண் என்பார் வேமனரின் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு இப்புலவர் கி.பி. 1652 இல் பிறந்தார் என்றும் இவரது எழுத்துக்கள் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கு உரியவை என்றும் கூறியுள்ளார் (Brown, 1829). வேமனாரை மேற்கோள் காட்டும் **தேரையர் மகா கரிசல்** என்னும் நூல் 18ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குப்பின்னர் எழுதப்பெற்றிருத்தல் வேண்டும்.

தேரையரின் சீடராகத் தம்மைக் கூறிக்கொள்ளும் யூகி முனி என்பவரின் **சிகிச்சாசாரம்** அல்லது **வைத்தியசிந்தாமணி** என்னும் நூலில் தேரையரின் நூல்களின் பெயர்களும் போகரின் நூல்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. வைற்லோ ஐன்ஸ்லி பட்டியலிட்டுள்ள தமிழ்மருத்துவ நூல்களுள் தேரையரின் ஒரு நூல்கூட இடம்பெற்றிருக்கவில்லை (Ainslie, 1826).

தேரையர், யூகி, போகர் போன்ற சித்தர்கள் பெயர்களில் இன்று பல நூல்கள் கிடைக்கப்பெறினும் இவற்றுள் ஒருசில 19ஆம் நூற்றாண்டில் ஆக்கப்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஐன்ஸ்லியும், எட்வார்ட் பல்போரும் தந்துள்ள தமிழ் மருத்துவ நூற்பட்டியலில் **போகர் 700** இடம் பெற்றுள்ள போதிலும் **போகர் 7000** இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது (Ainslie, 1826 & Balfour, 1885).

**போகர் ஏழாயிரம்** (போகர் 7000) என்னும் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் பெருநூலில் சித்தர்கள் பற்றிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. சித்தர்கள் ஒவ்வொருவரினதும் வயது, சாதி, பிறந்த நட்சத்திரம் மற்றும் அவர்கள் செய்துகாட்டிய அற்புதங்கள் பற்றிய பல தகவல்களை இந்நூலில் காணமுடிகின்றது. யாக்கோபு என்னும் சித்தரின் மக்கா விஜயம், அவர் இஸ்லாம் மதத்தை தழுவியமை, போகர் மற்றும் காலாங்கிநாதர் ஆகியோரின் சீனத்தொடர்பு போன்ற ஒன்றிரண்டு மரபுவழிச் செய்திகளுடன் சித்தர்களின் சாதி, பிறந்த நட்சத்திரம் போன்ற விடயங்களையும் இட்டுக்கட்டி இந்தப் பெருநூல் ஆக்கப்பட்டுள்ளது. போகர் ஏழாயிரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஓரளவேனும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதனையும் தமிழில் அல்லது பிறமொழிகளில் உள்ள சித்தர் நூல்களில் காண முடியவில்லை.

சித்தர்களுள் பெரும்பாலானோர் சாதி வேறுபாடுகளைக் கண்டித்தவர்கள். இவர்களுக்கும் சாதி கற்பிக்கின்றார் போகர் ஏழாயிரம் என்னும் நூலை ஆக்கியவர். தேரையர் என்னும் ஆயுள்வேத நூலாசிரியரைப் பிராமணன் என்றும் புலிப்பாணியை வேடர் என்றும் கமலமுனியைக் குறவர் என்றும் குதம்பைச்சித்தரை இடையர் என்றும் சுந்தரானந்தரை அகமுடையார் என்றும் சாதி அடையாளம் காட்டுகின்றார். மச்சமுனியையும் சட்டை முனியையும் சிங்களவர் என்றும் கோரக்கரை மராட்டியர் என்றும் கூறுகின்றார்.

*மலையான சட்டமுனி சாதிபேதம்*
*மகத்தான சிங்களவன் என்னலாகும்*
*சிலையான கோத்திரங்கள் பதினான்காகும்*
*சிற்பரனே கண்ட நூல் அறிந்தமட்டே.* (பாடல் 5700)

சித்தர்கள் பற்றிய செய்திகளைத் தாம் சித்தர் நூல்களில் கண்டறிந்ததாக் கூறுகின்றார். எனினும் சித்தர்களின் சாதி மற்றும் பிறந்த நட்சத்திரங்கள் பற்றிப் போகர் 7000 தவிர்ந்த வேறு எந்த நூலும் கூறியதில்லை.

*பூமான்கள் சித்தவர்க்க நூல்கள்தன்னில்*
*புகட்டவில்லை ஜாதிபேதம் புகலார் தாமே* (பாடல் 5700)

என்று சித்தர்கள் சாதி வேறுபாடு பேசமாட்டார்கள் என்பதை ஒரு பாடலில் வலியுறுத்தும் நூலாசிரியர் அடுத்த பாடலில்

*தானான சில நூலில் சொன்னாரப்பா*
*தன்மையுள்ள சில நூலில் சொல்லவில்லை* (பாடல் 5701)

என்று முன்னுக்குப்பின் முரண்படக் கூறுகின்றார்.

சித்தர்கள் ஒவ்வொருவரினதும் வயதை மிக மிக நீண்டதாகக் காட்ட போகர் ஏழாயிரம் முனைகின்றது. உதாரணமாகப் புலிப்பாணிச் சித்தரின் வயது 600 என்றும், சட்டை முனியின் வயது 800 என்றும், தேரையரின் வயது 300 என்றும், காலாங்கி நாதரின் வயது 3000 என்றும் என்றும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*புரிகுவார் வயதினுட மார்க்கந்தன்னை*
*புகலுவேன் காலாங்கி நாதருக்கு*
*சரியுடனே மூவாயிரஞ் சொச்சமப்பா*
*சங்கமுடன் வயதுதான் என்னலாகும்* (பாடல் 5743)

சித்திரைமாதம் அஸ்வினி நட்சத்திரம் நாலாம் பாதத்தில் காலாங்கி நாதர் பிறந்தார் என்கிறது போகர் ஏழாயிரம்.

*நூலான நூலதுதான் நுணுக்கம் மெத்த*
*நுட்பமுடன் காலாங்கி பிறந்த வண்ணம்*
*பாலான சித்திரையாம் மாதம் அப்பா*
*பாங்கான அசுவினியாம் நாலாம்காலாம்* (பாடல் 5869)

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த சித்தர் ஒருவர் சித்திரை மாதத்தில் அஸ்வினி நட்சத்திரம் நாலாம் பாதத்தில் பிறந்தார் என்னும் செய்தியைப் போகர் ஏழாயிரத்தின் ஆசிரியர் எவ்வாறு அறிந்திருக்கமுடியும் என்னும் கேள்வி எழாமல் இருக்கமுடியாது. சித்தர்களின் சாதி, வயது, பிறந்த நாள் என்பவை பற்றிப் போகர் ஏழாயிரம் என்னும் நூல் தரும் தகவல்கள் அனைத்தும் ஆதாரமற்ற வெறும் கற்பனைச் செய்திகளாகவே காணப்படுகின்றன.

போகர், புலிப்பாணி ஆகியோர் பெயர்களில் இன்று கிடைக்கப்பெறும் வைத்திய நூல்கள் பற்றி நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் கூறுவதை இவ்விடத்தில் கவனத்தில் கொள்வோம்.

*"போகரிடத்தில் வைத்தியம் கற்ற மாணவர் ஒருவர் அவர் கூறிய முறைகளைச் செய்யுளுருவாகப் பாடிப் போகர் நூலெனப் பெயர் புனைந்தார். பிற்காலத்து வைத்திய பண்டிதர்களும் தாம் அநுபவத்தால் கண்டறிந்த முறைகளைப் பாடிக் காலந்தோறும் அந்த*

> *நூலில் நுழைத்தும் விட்டார்கள். பிறகு அச்சிடப் புகுந்தோரும் கூட்டியும் திருத்தியும் மாற்றியும் அதனை அடியோடு பிறழ வைத்தார்கள். புலிப்பாணியென்பவர் போகரோடு சீனதேசத்திலிருந்து வந்து அவர் மீளும்போது அவருடனே போகாமல் தமிழ் நாட்டிலேயே தங்கிவிட்டவர். அவர் பாடலென்று உள்ளன யாவும் அவரால் பாடப்பட்டனவன்று, அதுவும் புரட்டு நூலேயாம். தமிழ் நாட்டுக்கு ஆதியிலேயே வைத்திய நூல்களை உபகரித்தவர்கள், அகஸ்தியர், தேரையர் முதலியோர்களே. அவர்களுள்ளே பெரும்பாலானவை அழிந்தனவேனும் எஞ்சி நின்ற சில நூல்களை நோக்குமிடத்து அவையாவும் வட நூல்களுக்கு இணக்கமாய் இருப்பது பிரத்தியட்சமாகும், போகர் புலிப்பாணி நூல்களோடு சிறிதுமொவ்வா."*
>
> (கதிரவேற்பிள்ளை, 1918)

பழனி முருகன் கோவிலின் கருவறையில் உள்ள மூலவர் சிலையை ஒன்பது வகையான பாஷாணங்களைக் கொண்டு வடிவமைத்துப் பிரதிட்டை செய்தவர் போகர் என்னும் சித்தரேயாவர் என்பது நீண்டகாலமாகப் பேசப்பட்டுவரும் ஒரு மரபு. இந்தப் போகரின் சமாதியும் பழனியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் கதிரவேற்பிள்ளை குறிப்பிடும் சீனத்துப் பௌத்த துறவியான போகரும் பழனி முருகன் கோவில் மூலவரை நவபாஷாணத்தால் உருவாக்கிய போகரும் ஒருவராக இருக்கமுடியாது.

போகர் என்னும் பெயருடைய சித்தர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்துள்ளார்களா? திருமூலரின் சீடர்களுள் ஒருவரான காலாங்கி நாதரின் சீடரான போகரும் பழனி மூலவர் சிலையை உருவாக்கிய போகரும் ஒருவரா அல்லது இருவேறு நபர்களா என்பது போன்ற கேள்விகளுக்கு விடைகாண்பதற்குத் தற்போதுள்ள சித்தர் நூல்கள் உதவவில்லை. கால முரண்பாடுடைய செய்திகள் பல சித்தர் நூல்களில் காணப்படுகின்றன.

இராமதேவர் என்னும் சித்தர் அரேபியா சென்று இஸ்லாம் மதத்துக்கு மாறி யாக்கோபு என்னும் பெயருடன் மெக்கா என்னும் புனித நகருக்குச் சென்றதாகவும் பின்னர் இந்தியா திரும்பியதாகவும் பிற சித்தர் நூல்களில் கூறப்படும் செய்தி போகர் ஏழாயிரத்திலும் கூறப்பட்டுள்ளது. இந்த யாக்கோபு சித்தரைப் 'பக்கிரி' என்று இந்நூல் குறிப்பிடுகின்றது.

*தாமேகேள் இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்*
*தயவான பாலகனே மைந்தா பாரு*
*போமேதான் பக்கிரி யாக்கோபுவென்றும்*
*பொங்கமுடன் சாத்திரத்தின் உரைத்தவார் போல்*
*நேமமுடன் வயததுவுமே தென்றக்கால்*
*நிலையான வாண்டதுவும் இரு நூற்றுச்சொச்சம்*
*நாமமுடன் நபி நாயகன் தன்னைக்காண*
*நன்னயமாய் மக்கபுரி போனார்தாமே.* (பாடல் 5700)

இஸ்லாம் மார்க்கத்தில் இரந்துண்ணும் துறவிகளைக் குறிக்கப் பயன்படும் அரபுமொழிப் பெயரான பக்கீர் (Fakir) என்னும் சொல்லில் இருந்து பிறந்ததே 'பக்கிரி' என்னும் தமிழ்ச் சொல்லாகும். இந்து மற்றும் முஸ்லீம் துறவிகளைக் குறிக்கும் பக்கிரி என்னும் சொல் இந்தியாவில் பதினேழாம் நூற்றாண்டிலேயே வழக்கில் வந்தது. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்கப்பெற்ற **பிரபுலிங்கலீலை** என்னும் நூல் பற்றி போகர் ஏழாயிரம் பேசுகின்றது. பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலைப் பற்றிய குறிப்பையும் போகர் ஏழாயிரத்தில் காணமுடிகின்றது. நீராவிக்கப்பல். புகையிரதம், பரசூட் போன்ற கண்டுபிடிப்புக்கள் பற்றிய விளக்கங்கள் போகர் ஏழாயிரத்தில் தரப்பட்டுள்ளன. உலகின் முதலாவது பயணிகள் புகையிரதம் இங்கிலாந்தில் 1825 ஆம் ஆண்டிலேயே முதன்முதலாக ஓடியது என்பதை இவ்விடத்தில் நினைவு கூரலாம்.

போகர் என்னும் சித்தர் தம் சீடரான புலிப்பாணிக்குக் கூறுவது போல் எழுதப்பட்டிருக்கும் போகர் 7000 என்னும் நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க முடியாது. இந்நூல் எழுதப்பட்ட காலப்பகுதியில் சித்தர்கள் பெயரில் வழங்கப்பட்ட, பழைய ஏட்டுச்சுவடிகளில் இருந்து

கிடைக்கப்பெற்ற தகவல்களையும் ஒரு சில மரபுவழிக் கதைகளையும் திரட்டியும் கூட்டியும் ஆக்கப்பெற்ற ஒரு நூலே போகர் ஏழாயிரம் ஆகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சித்தர்கள் பற்றிய உண்மையான வரலாற்றை அறிவதற்கு இன்று கிடைக்கப்பெறும் போகர் ஏழாயிரம் எவ்விதத்திலும் உதவமுடியாது. மாறாக, வெறும் கற்பனைச் செய்திகளை வரலாறாகப் பாமர மக்களை நம்பவைக்கும் முயற்சியில் இந்நூல் வெற்றி கண்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

**முடிவுரை**

சித்தர் மருத்துவ நூல்கள் என அறியப்படும் நூல்கள் ஆக்கப்பெற்ற காலப்பகுதியை அவற்றின் யாப்பு நிலை, மொழிநிலை என்பவற்றை ஆதாரமாகக்கொண்டு ஆராயுமிடத்து அவற்றுள் மிகப் பெரும்பாலானவை பதினாறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பெற்றிருக்கமுடியாது என்பது தெளிவாகின்றது. மேலும் இந்நூல்களில் கூறப்படும் பறங்கி ரோகம், பறங்கிப்பட்டை என்பவை பற்றிய குறிப்புகள் இவற்றைப் பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிந்தியகாலத்துக்கு உரியனவாகவே கொள்ளவைக்கின்றன. பதினாறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதப்பட்ட நைடதம் முதலான நூல்கள் பற்றிய குறிப்புகளும் பிற்காலத்தவரின் கண்டுபிடிப்புக்களான நீராவியால் இயங்கும் இயந்திரம் பற்றிய செய்திகளும் சித்தர் நூல்கள் சிலவற்றில் இடம்பெற்றுள்ளமை இம்முடிபுக்கு மேலும் வலுசேர்க்கின்றது.

**துணைநூற்பட்டியல்**

Ainslie, W. (1836). *Materia Indica* (Vol. I & II). London: Nebu Press.

Balfour, E. (1885). *The Cyclopædia of India and of Eastern and Southern Asia, Commercial Industrial, and Scientific: Products of the Mineral, Vegetable, and Animal Kingdoms, Useful Arts and Manufactures* (Vol. 2). London: Bernard Quaritch.

Brown, C. P. (1823). *Verses of Vemana*. Retrieved from https://www.sacred-texts.com/hin/vov/vov00.htm

Marco Polo. (2008). *The Travels of Marco Polo The Venetian, Translated by W.Marsden and revised by T.Wright, Newly revised and edited by Peter Harris with an Introduction by Colin Thubron*. United Kingdom: Everyman's Library.

Orta, G. d. (1913). *Colloquies on the simples and drugs of India,* (Translated by Sir Clement Markham). London: H. Sotheran and Co.

Ramachandra Rao, S. K. (1985). *Encyclopedia of Indian Medicine, Historical Perspective (Vol.1)*. Bengalore Dr.V. Parameshvara Charitable Trust.

White, D. G. (1996). *The Alchemical Body: Siddha Traditions in Medieval India*. Chicago and London: The University of Chicago Press.

கதிரவேற்பிள்ளை, நா. (2003). *தமிழ்மொழி அகராதி.* (செம்பதிப்பு). சென்னை: சாரதா பதிப்பகம்.

சிவகடாட்சம், பால. (2006). *தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்* (சிவத்தம்பியின் அணிந்துரையுடன்). திருகோணமலை, இலங்கை: வானவில் வெளியீட்டகம்.

சிவகடாட்சம், பால. (2020). அகஸ்தியர் இரண்டாயிரமும் செகராசசேகரமும். *மணற்கேணி,* 49, 40-47.

தியாகராாசன், இரா. (பதிப்பாசிரியர்). (1975). *ஏழுநூற்றொகுதி* (கோரக்கர், போகர் அருளியது). சென்னை: அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்தமருத்துவ நூல் வெளியீட்டுக்குழு.

பொன்னையாபிள்ளை, ஐ. (பதி.). *செகராசசேகர வைத்தியம்.* (மீள்பதிப்பு). இலங்கை: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்.

வெங்கடராஜன், எஸ். (பதி.). (1958). *அகஸ்தியர் 2000.* தஞ்சாவூர்: சரஸ்வதி மஹால்.